TELO



# நாம்
# வன்முறை மீது
# காதல் கொண்ட
# மனநோயாளிகள்
# அல்லர்

# கறுப்பு ஜூலை நினைவேந்தல்

## வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள்

## 35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி







**1983 ஜூலை 25-27 வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட**
**தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேசபிதா தங்கத்துரை.**
**தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன், தேவன், நடேசுதாசன்,**
**சிவபாதம், சிறீக்குமார், குமார், மரியாம்பிள்ளை, குமாரகுலசிங்கம்**
**உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மற்றும் அனைத்துப் போராளிகளையும்**
**பொதுமக்களையும் நினைவு கூரும் தமிழ்த் தேசிய வீரர்கள் தினத்தில்**
**கலந்துகொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.**

**காலம்: 28, ஜூலை 2018 சனிக்கிழமை, மாலை 6.00 மணி**
**இடம்: பீக்கொன் சென்ரர், கரோ**
**Beacon Centre, 9 Scott Cres, Harrow,  Middx HA2 0TY**
**ஈகைச் சுடரை தளபதி குட்டிமணி அவர்களின் பாரியார் ஏற்றவுள்ளார்.**

**Speakers from**
**TELO, ITAK, PLOTE, EPRLF, SDPT, EPDP, TIC, BTF, GTF, BTC, TGTE**
**TNPF, TCC, NRTSL and Many Others**

**கறுப்பு ஜூலை நினைவேந்தலில் அனைவரும் ஒன்றிணைவோம்**

சாம் : 07836 368 658 ரூபன்: 07752 079 379 பீற்றர் – 07807 910 162 மோகன்: 07908 7171 938

**பிரித்தானியக்கிளை**
**தமிழ் ஈழ விடுதலை இயக்கம்**

**www.telo.org #twitter.com/contacttelo #facebook.com/telo.org**

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

TELO



# நாம் வன்முறை மீது
# காதல் கொண்ட
# மனநோயாளிகள் அல்லர்

– தங்கத்துரை

முதற்பதிப்பு: வைகாசி, 1983

இரண்டாம் பதிப்பு: ஆடி 2018 (திருத்தியமைக்கப்பட்டது)

வெளியீடு:

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம்**

www.telo.org #twitter.com/contacttelo
#facebook.com/telo.org

# விடுதலை வரலாற்றின் முன்னுரை

தமிழினத்தின் தேசிய விடுதலைக்கு சக்தி மிக்க மக்கள் ஆயுதப் போராட்டம் மூலம் தீர்வு பெறுவதற்குப் புரட்சிகர இயக்கமொன்றை முதன் முதலாக அமைத்தவர் தலைவர் தங்கத்துரை. அவர் அமைத்த தமிழ் ஈழ விடுதலை இயக்கமே இன்று தமிழீழத்தில் இயங்கும் அமைப்புகளின் முன்னோடி எனலாம்.

எமது இயக்கம் தனக்கேயுரிய நீண்ட, விரிவான போராட்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

தலைவரின் ஸ்ரீலங்கா அரசின் நீதிமன்ற உரை அந்த வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். அது எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு பாரிய உந்து சக்தியை அளித்தது எனலாம்.

பாசிச நீதி மன்றத்தில் தலைவரின் வரலாற்றுப் புகழ்மிக்க உரை, சிங்கள அரசின் தலையில் புரட்சிப் பேரிடி விழுமெனும் ஒரு முன்னெச்சரிக்கை; தமிழீழம் பிறக்க இருப்பதற்கு ஒரு தீர்க்கதரிசனம்; ஈழத் தமிழர்களே ஓர் அமைப்பில் திரளுங்கள் எனும் விடுதலைக் கீதம்; தமிழீழ விடுதலை வரலாற்றுக்கோர் முன்னுரை.

ஆம், அது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் "**பாசறைக்குரல்**".

இவ் வெளியீடு எமது இயக்கத்தின் வரலாற்றுப் பின்னணியின் சுருக்கத்தையும், ஸ்ரீலங்கா அரசின் பாசிச நீதி மன்றத்தில் தலைவர் ஆற்றிய உரையினை முழுமையாகவும் கொண்டிருக்கும். மேலும், சந்தியேந்திராவின் தொகுப்புரையின் ஒரு பகுதியும் அடங்கும்.

# தமிழ் ஈழத்தின் இறைமை

“ஆக்கிரமிப்புக்கள் காலத்திற்குக் காலம் வெவ்வேறுபட்ட அதிகார அமைப்புக்களால் கைமாறிப் பொறுப்பேற்கப்பட்டநிலையே இன்றும் நிலைத்து நிற்கின்றது. தவிர பாரம்பரிய எம் தாயகத்தின் தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் நிலை இன்னும் எம்மிடம் வரவில்லை”.

(தலைவரின் உரையில் இருந்து...........)

இலங்கைத் தீவு மரபு வழியாக இரு வேறு தமிழ், சிங்கள ஆட்சிகளையே கொண்டிருந்தது.

இதனைக் காலனி ஆதிக்கத்துக்குட்படுத்திய ஆங்கிலேயர் ஆட்சி நிர்வாக வசதியின் பொருட்டு ‘பலவந்தமான பிரதேச இணைப்பு’ செய்து கொண்டனர்.

அவர்கள் இத்தீவில் இருந்து வெளியேறுகையில் முற்றிலும் மாறுபட்ட இவ்விரு தேசிய இனங்களினது வேறுபட்ட பிரதேசங்களின் ஒட்டுமொத்த ஆட்சிப் பொறுப்புக்கு தற்போதைய சதிக் கூடமாகிய பாராளுமன்றத்தின் திறவு கோலை சிங்கள முதலாளித்துவக் கட்சிகளிடம் தாம் இங்கு சுரண்டிய செல்வங்களுக்கு பண்டமாற்றுச் செய்து கொண்டனர்.

இதற்கு சில தமிழ் துரோகிகளும் (அரசியல் தலைவர்கள்) அரசியல், பொருளாதாரச் சலுகைகளைப் பெற தரகு நின்று தம்மை வளர்த்துக் கொண்டனர்.

தமது இறைமையில் அன்றைய தமிழ் மக்களின் ‘அரசியல் விழிப்புணர்ச்சியின்மை’ எம்மின வரலாற்றில் ஓர் இருண்டகாலம்.

## விடுதலைக்கு ஒரு முன்னறிவிப்பு

இந்நிலையில் சிங்கள இன வெறி அரசின் முதலாளித்துவக்கட்சிகளினால் இனக்குரோத அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் கொள்கைகளே எமது உரிமைகளையும் உடைமைகளையும் பறித்தெடுத்தன.

இதை அன்று தனிச் சிங்களச்சட்டம், இன்று பயங்கரவாதத் தடைச் சட்டம் என்னும் விடுதலைப் போராட்டத் தடைச்சட்டத்தை உருவாக்கிக் கொள்ளும் அளவிற்கு ஒடுக்கி முறை மேலாதிக்கம் விரிவாக்கப்பட்டதை நன்கு புலப்படுத்திக் காட்டுகின்றது.

மேலும், அவர்களின் எமது உரிமைப்பறிப்புச் சாதனங்களின் தோற்ற வரலாற்றையும் அதன் விளைவுகளையும் நாம் முற்று முழுதாக நன்கு அறிவோம். இதன் விம்பங்களே இன அடக்கு முறை, பிரதேச ஒடுக்கல், பொருளாதாரச் சுரண்டல் போன்ற பல வடிவங்களில் துலக்கமாகத் தோன்றின. இவையே வன்முறை, போராட்டம், புரட்சி என்பவை தோன்றிவிடும் என்பதற்கு ஒரு முன் எச்சரிக்கையாகியது.

## தேசிய விடுதலையின் அடிப்படைத் தீர்வு

இவைகளைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கொள்கைகள் தெளிவு நிலை பெறத் தொடங்கின.

சிங்கள இனவெறி ஆதிக்க அரசு இயந்திரத்தின் ஒடுக்கு முறை ஆட்சியில் இருந்து எம்மை விடுவித்துக் கொள்ள “தனியே பிரிந்து செல்வது” தவிர்க்க முடியாத, இன்றி அமையாத ஓர் அகநிலை காரணமானது. அதாவது தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை மார்க்கத்திற்குரிய வலிவானதும், விரிவானதுமான அடிப்படைத் தீர்வு பிரிவினை ஒன்றே.

இதன் பூரணமான புறநிலைத்தோற்ற வெளிப்பாடே **“சுதந்திர சோசலிசத் தமிழ் ஈழம்”**

இது எமக்கே உரிய மொழி, கலாச்சார பண்பாட்டு ரீதியான ஒரு தேசிய

இனத்தின் பொருளாதார மற்றும் அரசியல் ஆட்சியின் பிரதேச வரையறை பெற்றதாக அமையும்.

தமிழ் ஈழம் என்பது யதார்த்தமான, இயற்கைக்கு ஒத்த தன்மை உடையதுமான, எம்மால் அடையக்கூடிய பாதையை உடையதே அன்றி பாதையற்ற நிலை உடைய வெறும் கற்பனை வடிவமல்ல.

இதுவே எமது சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் அடிப்படைத் தீர்வாகும்.

## சப்பாணிப் போராட்டம்

தமிழ் அரசியல் தலைவர்களும், அவர்களின் சகாக்களும்புதிய விடுதலைப் போராட்ட முறைகள் எவற்றையும் எமக்கு போதிக்கவில்லை. மாறாக அழியும் தறுவாயில் உள்ள கிழிந்து போன எமக்குப் பயன்பாடற்ற பழைய தத்துவங்களை எம்மின விடுதலையின் பாடப் புத்தகங்கள் எனப் பசப்பினார்கள்.

இத்தனைக்கும் இவர்கள் எம்மை அடக்கி ஆள்வோர் அகிம்சைக்கு எவ்வளவு தூரம் மதிப்பு அளிக்கும் தன்மையுடையோர் என்றோ, அன்றி அடிபணிந்து கொள்வார்கள் என்றோ முன்கூட்டியே அறிந்துகொள்ளும் தீர்க்க தரிசனத்தைக் கொண்டிருக்கவில்லை.

அதாவது அடக்கி ஆளும் வர்க்கம் எதன் மீது நம்பிக்கை கொள்கின்றதோ, அதனைக் கையாள்வதன் மூலமே அடக்கப்படும் வர்க்கம் தேசிய விடுதலை பெற முடியும் என்பதை ஏனோ இவர்கள் ஜீரணிக்க மறுக்கின்றனர்.

இவர்கள் தேர்தல் மூலமும் ஒப்பந்தங்களாலும் பேச்சு வார்த்தைகளாலும் அரசிடம் இருந்து சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டு அதுவே விடுதலையின் வழி என வரிந்து கட்டினர்.

இவர்களின் விடுதலைப் போராட்டம் சரியான பாதையைக் கொண்டிருக்கவில்லை. இப்பாதையே இவர்கள் தொடர்ச்சியாகக் கொண்டிருப்பார்கள் ஆனால் கால ஓட்டத்தில் மக்கள் இவர்களின் பாதையைப் புறக்கணிப்பார்கள்.

## ரெலோஸ்டுகளின் நவீன போராட்டம்

தமிழ் அரசியல் தலைவர்களின் போராட்ட ஆற்றலைச் சிங்கள அரசு மழுங்கடித்தது. இவர்கள் தூக்கிப் பிடித்த “அகிம்சை” மனிதாபிமானம் அற்ற முறையில் சிங்கள அரசினாலும் அதன் கூலிப்படைகளாலும் சின்னா பின்னமாக்கப் பட்டது.

இவர்களின் போராட்டப்பாதையில் நம்பிக்கை இழந்த **மக்கள் புரட்சிகர போராட்டப் பாதையை** முன்னெடுத்தார்கள்.

இதன் பின்னணியே இன்று முற்போக்கு வாதிகளாகத் திகழும் எழிச்சிமிக்க மக்கள் ஆயுதப் போராட்ட முறைகளை துல்லியமாய் வரையறுத்திருக்கும் “தமிழ் ஈழ விடுதலை இயக்கமாகும்”.

இது சாத்வீக வாதிகளின் மெய் அறிவின் வறுமை, போராட்டத் தோல்வி இவைகளை வரலாற்று ரீதியாக கற்றுத் தேர்ந்து, முற்றிலும் புரட்சிகரத் தத்துவார்த்த ரீதியான வேலைத் திட்டங்களைக் கொண்டுள்ளதே அன்றி, கற்பனாவாத அடிப்படையில் எழுந்த தத்துவங்களையோ, போராட்ட விதிகளையோ கொண்டிருக்கவில்லை. அவ்வாறான தவறான வழியில் போராடுபவர்களும் அல்லர்.

நாம் நவீன போராட்டப் பாதையில் போராடும் ரெலோஸ்டுக்கள்.

அப்பாதை ஆயுதம் ஏந்திப் போராடும் புரட்சிகர சித்தாந்த கோட்பாடுகளைக் கொண்டதாகும்.

அதுவே எம் இலட்சியத்திற்கு இட்டுச் சென்று எமக்கு வெற்றியினை அளிக்கவல்ல, அடக்கும் வர்க்கத்தினால் தகர்த்தெறிய முடியாது, அவர்களை அடி பணிய வைக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள்.

இதையே தலைவர் **“நாங்கள் வன்முறைமீது காதல் கொண்டவர்ளோ, அன்றி அது மாதிரியான நோய்களால் பாதிப்புற்ற மன நோயாளிகளோ அல்லர். மாறாக தமிழ் இன விடுதலையை முன்வைத்துப் போராடும் ஒரு ஸ்தாபனத்தின்**

**அங்கத்துவம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள்"** எனத் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

ஆயுதப் போராட்டம் என்பது சில நபர் வேலைத்திட்டம் அல்ல. அவ்வாறாயின் அது விடுதலைக்கான தெளிவான பாதையும் அல்ல.

எனவே தேசிய விடுதலைக்கு மக்கள் ஆதரவுடன் அமைப்பு ரீதியாக வளர்ச்சியடைந்துவரும் எமது இயக்கத்தின் திட்டமிட்ட விரிவாக்கப்பட்ட மக்கள் ஆயுதப் போராட்டமே யதார்த்தமானதாகும்.

அல்லாமல் வெளிநாட்டு சந்தர்ப்பவாத பிற்போக்கு குழப்ப வாதிகளினால் தெளிவற்ற சித்தாந்தத்தில் இழுத்துச் செல்லப்படும் தனி நபர் குழுவாதிகளின் போராட்டம் தமிழ் ஈழ விடுதலைக்குரிய சரியான அணுகு முறையல்ல.

சிலர் வெளிநாட்டு வல்லரசுகள் தலையிட்டு எமக்கு விடுதலை பெற்றுத் தருவார்கள் என்று போராட்டப் பாதையைத் திசை திருப்பி மழுங்கடிக்கப் பார்க்கிறார்கள். இது இவர்களின் மட்டமான சிந்தனையையும், குழப்பமான பாதையையும் தெட்டத் தெளிவாக்குகின்றது.

தமது நிலையையும், பக்க விளைவுகளையும் சிந்திக்க மறுக்கும் சிலரின் அடாவடித்தனம் தொடர்ச்சியாக நிகழுமாயின் அவர்களின் போராட்டம் அந்திமகாலத்தை நெருங்கும்.

எனவே தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கும், அவர்களின் எதிர்கால சுதந்திர வாழ்விற்கும் ஓர் உத்தரவாதமே ரெலோஸ்டுக்களின் நவீன விடுதலைப் போராட்டம்.

## ரெலோஸ்டுக்களும், சர்வதேச விடுதலை போராட்டங்களும்

முதலாளித்துவ வல்லரசுகளே எம்மை அடக்கி ஆளும் ஸ்ரீலங்கா பாசிச அரசிற்கு பண முடிச்சுக்களையும் கொலைக்கருவிகளையும் அள்ளிக் கொட்டுகின்றன. சில வல்லரசுகளும் அதன் அடிவருடிகளும் எமது போராட்டத்தை முறியடிப்பதற்கு

இராணுவ நிபுணத்துவத்தையும் ஆயுதங்களையும் கொடுத்து உதவுகின்றது. அமெரிக்க அரசின் கை பொம்மையே ஸ்ரீலங்காவின் ஜெயவர்த்தன அரசு.

உலகில் பெரும் பகுதியான மக்களை அடிமைப்படுத்த ஒடுக்குமுறை ஆட்சிக்கு துணைபுரிவது இவ்வல்லரசுகளே. இவ் ஏகாதிபத்திய மேலாதிக்க ஒடுக்குமுறை அமைப்பின் அடித்தளங்களை தகர்த்தெறியும் வகையில் சர்வதேச ரீதியில் தேச விடுதலை அமைப்புக்கள் தாக்குதல் தொடுக்கத் தொடங்கிவிட்டன.

அவற்றில் பல வெற்றி பெற்று விட்டன. மற்றைய போராட்டங்கள் வெற்றியை நோக்கி இடைவிடாது தொடர்கின்றன.

சர்வதேச விடுதலைப் போராட்டங்களை மழுங்கடிக்கும் எந்த ஒரு வல்லரசையும் நாம வன்மையாக எதிர்க்கின்றோம். அவற்றிற்கு எதிரான போராட்டங்களிற்கு எல்லாம் நாம் முழுமையான ஆதரவை அளிப்போம்.

இதையே தலைவர் **“எமது நோக்கம் மிக விசாலமானது, அது ஆப்பிரிக்கக் கண்டம் என்றால் என்ன, லத்தீன் அமெரிக்க நாடுகள் என்றால் என்ன எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காக போராடும் நோக்கத்தையும் உள்ளடக்கியது”** எனத் தெளிவாகக் கூறினார்.

அதே போல் சிங்கள மக்கள் இம் முதலாளித்துவ அரசின் பொருளாதாரக் கொள்கைகளின் சுமைகளைத் தாங்காது, அதன் தளைகளை உடைத்தெறிய எதிர்காலத்தில் போராடுவார்களானால், நாம் நிச்சயமாக ஆதரவளிப்போம்.

## ரெலோஸ்டுகளின் தலைவர்

தமிழீழ ரீதியில் தோன்றிய விடுதலை அமைப்புக்களின் மூலகர்த்தாவும் தமிழ் ஈழ விடுதலைக்கு இயக்கமொன்றை முதல் முதலில் அமைத்தவரும் கடந்த பத்து ஆண்டுகளாக ரெலோஸ்டுக்களை வழி நடத்திய எமது இயக்கத்தலைவர் தங்கத்துரை தமிழ் ஈழ விடுதலைக்கு சக்தி மிக்க மக்கள் ஆயுதப் போராட்டத்தின் படி முறையிலான வளர்ச்சிக்கு இயக்க விதிகளையும், அதன் வேலைத்

திட்டங்களையும், நடைமுறைப் போர்த் தந்திரங்களையும் முழுமையாகக் கொண்டிருக்கும் தத்துவம் ஒன்றை முழு அளவிற்கு முரண் இல்லாத வகையில் அமைத்துப் போராடுவதன் மூலமே சாத்தியமாகும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருந்தார்.

இது ரெலோஸ்டுக்களின் நவீன போராட்டத்தத்துவமாய் அமையும்.

இவரது முதிர்ச்சி பெற்ற சிந்தனைத்திறனும், அதன் பொது நல நோக்கும் தன்நம்பிக்கையும் பார்ப்பவரை கவர்ந்திழுக்கும் பரிவுணர்வும் எளிமை நிறைந்த வாழ்வும் கொண்ட கொள்கையை நிறைவேற்றத் துடிக்கும் வைரம் பாய்ந்த நெஞ்சும் விடாமுயற்சியும் அறநெறியில் பிறழாநிலையும் நடுநிலைமையும் இவரை இலட்சிய வேட்கை கொண்ட விடுதலைப் போராளிகளும், யதார்த்தமான விடுதலைப்பாதையில் வீறுநடைபோடும் ரெலோஸ்டுக்களின் தன்நிகரில்லாத் தலைவனாக்கியது.

தமிழீழ விடுதலையைப் பெறுவதற்கு புரட்சிகரப் பாதையில் ரெலோஸ்டுகளின் விடுதலை போராட்டத்தை முடுக்கி விட்டார்.

அவரின் தெளிவான சிந்தனையே, அதன் புரட்சிமிகு செவ்வொளியே இன்று விடுதலைப் போராட்டத்தில் கரைசேர முடியாது தத்தளிக்கும் திசைமாறிப் பயணம் செய்யும் மக்களுக்கு கலங்கரை விளக்கமாகியது.

## செயலதிபர்

எமது தலைவரின் வேலைத்திட்டங்களின் வெற்றியின் இரகசியம், ரெலோஸ்டுக்களின் இரகசிய இராணுவப் பாசறையின் முன்னோடி எமது இயக்கத்தின் செயலதிபர் குட்டிமணி – தமிழ் ஈழ விடுதலைக்கு எழிச்சி மிக்க மக்கள் ஆயுதப் போராட்டத்தின் முதல் விடுதலைப் போராளியாவார்.

இவரின் விவேகம் நிறைந்த இயற்கையான நவீன ஆயுதக் கையாளுகையும் அவற்றின் அதிவேக செயற்பாடுகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை அதிர வைத்தன. அதனால்தான் என்னவோ இவர் தலைமறைவு அமைப்பில் இருந்த





'தமிழ்ப் பிரதேசத்திலிருந்து சிறீலங்கா இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும். இல்லையேல் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினராகிய நாம் அவர்களைப் பலாத்காரமாக வெளியேற்றுவோம்". – குட்டிமணி

காலத்தில் இவரைக் கண்ட போலிஸ் அதிகாரிகளும் இராணுவத்தினரும் இவரது கண்ணில் படாமல் விலகிச் சென்ற சம்பவங்களும் நிகழ்ந்தன.

இவர் விடுதலைப்போராட்டத்தில் தனது உயிரையோ உடமையையோ கருத்தில் கொண்டு போராடியவர் அல்லர். அதனால்தான் தூக்குமர நிழலிலும் அஞ்சாது நின்று விடுதலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வீர உரையினை நிகழ்த்தினார்.

என்றும் விடுதலை உணர்வு மிக்க தமிழ் நெஞ்சங்களில் எதிரொலிக்கும் அந்த உரையினை நாம் இங்கு எழுதி நினைவு கூர வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கின்றோம்.

## ரெலோஸ்டுகளின் போராட்டத்தின் சர்வதேச தாக்கங்கள்

தமிழ் ஈழ விடுதலை வரலாற்றிலேயே முதல் முதலில் எமது இயக்க இரு தோழர்களுக்கு ஶ்ரீலங்கா அரசினால் மரண தண்டனை என தீர்ப்பளிக்கப்பட்டதும்: தோழர்கள் நடேசதாசன், தேவன், சிவபாதம் என்போரின் கைதும்: செயலதிபரின் எம்.பி. நியமனமும்: எமது தலைவரின் பாசிச நீதிமன்ற உரையும் சர்வதேச ரீதியாக எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் அந்தஸ்தையும் பெரும் ஆதரவையும் பெற்றுத் தந்துள்ளன.

ஶ்ரீலங்கா அரசு மனிதாபிமானம் அற்ற வகையில் எமது இயக்கத் தோழர்களின் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட சித்திரவதைகளை உடனடியாக நிறுத்தும்படியும், கைது செய்யப்பட்ட அனைத்து போராளிகளையும் விசாரணையின்றி விடுதலை செய்யும் படி கோரும் தீர்மானங்களை கடந்த ஆண்டு புதுவை சட்டசபை நிறைவேற்றியது. மேற்படி விடயங்களையும், ஶ்ரீலங்கா நீதி மன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்யும்படி கோரும் தீர்மானங்களை தமிழ் நாட்டு சட்டசபையும் நிறைவேற்றியது.

ஜெர்மனியில் இவ்வாண்டு ஏப்பிரல் 2ஆம் திகதி பாகிஸ்தான் மக்கள் கட்சித் தோழர்கள் எமது போராட்டத்தினை அங்கீகரிக்கும் வகையில், ‘ரெலோ’வின் சுலோக அட்டைகளைத் தாங்கிச் சென்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்

## Leader Thangathurai quotes that will live forever



1. We are not lovers of violence nor victims of mental disorders. We are honest fighters belonging to an organization that is struggling to liberate a people.
2. What we ask for is not division but freedom. Why we ask this is not because of narrow thinking. What we hope to achieve is not only the emancipation of the Tamil people but the greater good of the Sinhalese people themselves.
3. You must not run away with the thought that our sole objective is to establish Tamil Eelam. Tamil Eelam certainly remains an objective because we have learnt through bitter experience over the past several years that it is only by establishing a State of Tamil Eelam can Tamils live with self respect.
4. Our vision is broader than that. Our vision is global. Wherever there is oppression, wherever there is violation of human dignity, whether in Africa or in Latin America, we are prepared to link hands with the oppressed and the under dog. When our vision is so global how can it fail to take into account the future good of the Sinhala people?
5. We are firm believers in the saying that what one sows one reaps. That is why our minds are calm. The seeds we sowed were not seeds of poison, our arrow heads were not dipped in venom.
6. Truth does not require platforms. It has its own glory. No power on earth can suppress it forever.
7. There is nothing prevence two neighbouring nations living in co-opertion






1983ம் ஆண்டு வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட
தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி
போராளிகள் மற்றும் பொதுமக்களின் 35ம் ஆண்டு நினைவலைகள்
தமிழ் தேசிய வீரர்கள் தின ஞாபகார்த்த
இரத்ததான நிகழ்வு
இடம் : இரத்த வங்கி - வவுனியா.
காலம் : 27.07.2018 (வெள்ளிக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO) - ரெலோ
இளைஞர் அணி – தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
வவுனியா மாவட்டம்


வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள்
35ம் ஆண்டு நினைவஞ்சலி
* 1983 ஆடி 25, 27 *
தலைவர் தங்கத்துரை தளபதி குட்டிமணி, போராளிகளான ஜெகன், தேவன்,
நடேசுதாசன், சிவபாதம், சிறிக்குமார், குமார், மரியாம்பிள்ளை, குமாரகுலசிங்கம்
உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கண்ணீர் அஞ்சலி!
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)
TELO


குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை


கறுப்பு ஜூலை நினைவேந்தல்
வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள்
Beacon Centre, 9 Scott Cres, Harrow, Middx HA2 0TY
Speakers from TELO, ITAK, PLOTE,
EPRLF, SDPT, EPDP, TIC, BTF, GTF, BTC, TGTE,
TNPF, TCC, NRTSL and Many Others
TELO
www.telo.org # twitter.com/contacttelo # facebook.com/telo.org


ROYAL

நிகழ்த்தினார்கள். இதன் இறுதியில் நிகழ்ந்த பொதுக்கூட்டம் ஒன்றில் ரெலோவிற்கு தம் வாழ்த்துக்களை அளித்துக் கொண்டனர்.

விடுதலைப் போராளிகளை, “வெறும் பயங்கரவாதிகள்” என சித்தரிக்கும் ஶ்ரீலங்கா அரசின் சர்வதேச பிரச்சாரத்திற்கு ஒரு தலையடி கொடுக்கவும், இப்பாசிச அரசின் மிலேச்சாதிகார சட்ட ஆட்சியின் அடக்கு முறை மேலாதிக்கத்தை உலக பார்வைக்கு கொண்டுவரவும், நாம் அரசியல் ரீதியான அந்தஸ்தை பெறவே எம்.பி. நியமனத்தை ஏற்றுக் கொண்டோம்.

எமது தலைவரின் பாசிச நீதிமன்ற உரை, எமது இயக்கத்திற்கு பல்வேறு சர்வதேச விடுதலை இயக்கங்களுடனே உறவை மேலும் வலுப்படுத்தும்.

எனவே எமது இயக்கம் ஒன்றேதான் சர்வதேச ரீதியான வளர்ச்சிக்கு அதன் தொடர்ச்சியான போராட்ட கொள்கைகளை செப்பனிட்டு, தமிழ் ஈழ விடுதலைக்கு யதார்த்தமான போராட்டப் பாதையில் செல்லும் ஓர் அமைப்பாகும்.

# தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கத்துரை சிறீலங்கா நீதிமன்றத்தில் ஆற்றிய உரை

(1983 பெப்ரவரி 24ஆம் திகதி ஶ்ரீலங்கா கொழும்பு மேல் நீதிமன்றத்தில்)

கனம் நீதிபதி அவர்களே!

**ஶ்ரீலங்காவின் நீதிமன்றம் எதற்கும் எம்மை விசாரிப்பதற்கான அதிகாரம் உரிமை கிடையாதென்ற எமது ஆரம்ப ஆட்சேபனையையும் மீறி ஶ்ரீலங்கா அரசின் நீதி நிர்வாகப்பிரிவின் ஓர் அங்கமாகிய இம்மன்றம் எம்மீது இவர்களால் சோடிக்கப்பட்ட இவ்வழக்கை கடந்த நான்கு மாதங்களாய் விசாரித்து வந்துள்ளது.**

நாமும் இரண்டாம் கட்டமாகிய பகிஸ்கரிப்பு என்பதனை மேற்கொள்ளாது, இம்மன்றத்தின் விசாரணைக்கு சமூகமளித்தோம்.

எமது குற்றமற்ற தன்மை, மற்றும் எமக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை எமது சட்டத்தரணி, எமது சாட்சிகளின் மூலமாயும், சித்திரவதைப் புகழ் ஸ்ரீலங்கா அரசு பொலிஸ் அதிகாரிகளை தமது குறுக்கு விசாரணைகளின் போது அடிக்க வைத்த குத்துக்கரணங்களாலும் மற்றும் சட்ட வாதங்களின் மூலமாயும் மிக வெற்றிகரமாய் நிரூபித்து விட்டமை கண்கூடு.

வெள்ளையர் இந்நாட்டை சிங்களப் பிரபுகளிடம் தமிழ் மக்கள் தலைவிதியையும் சேர்த்து ஒப்படைத்து செல்கையிலேயே தமிழ் மக்கள் விடுதலையைக் கோரிவிடவில்லை. மாறாக சிங்களப் பிரபுக்கள் எம்மை இரண்டாம் தர பிரஜையாக்கமாட்டார்களோ என்ற சந்தேகம் எழுந்தது இயல்பே.

இதன் விளைவே தமிழ் தலைவர்கள் தம் இனம் நசிந்து விடக்கூடாது என்ற தீர்க்க தரிசனத்துடன் கூடுதல் பிரதிநிதித்துவம் போன்ற விடயங்களை அப்போது வலியுறுத்தினர். அவர்கள் சந்தேகங்கள் தவறான அடிப்படையில் ஒன்றும் எழுந்து விடவில்லை, என்பதை வலியுறுத்தும் வகையிலேயே அமைந்தது மலையகத் தமிழரின் வாக்குரிமைப் பறிப்பு. அடுத்து வந்த கால் நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களது உரிமைகள் மட்டுமல்லாது மரபு வழிப்பிரதேசங்களும் தமிழ் மக்கள் தலைவர்களினது கடும் எதிர்ப்புக்களையும் மீறி திட்டமிட்ட முறையில் சிங்கள அதிகார அமைப்பு முறையினால் பறிபட்டு வந்தமை ஒன்றுமே நடந்து விடாத விடயங்கள் அல்ல.

இக்கால கட்டத்தில் லட்சக் கணக்கான மக்களும் தமிழ்த் தலைவர்களும் தமது எதிர்ப்புக்களை அகிம்சை முறையில் மிக நாகரீகமாகவும் உறுதியுடனும் சத்தியாக்கிரக வழிகளிலும் காட்டினர். ஆனால் நடந்தது என்ன?

நிராயுத பாணிகளான தலைவர்கள் மீது முதல் முதலில் காலி முகத்திடலில் ஆயுதக் காடையர்கள் மூலம் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பின்னர் யாழ் செயலகத்தின்முன்பாக அப்பாவி மக்கள், தலைவர்கள் அடங்கிய

சத்தியாக்கிரகங்கள் மீது ஸ்ரீலங்காவின் ஏவல் இராணுவம் தனது காட்டுமிராண்டித் தனத்தை பிரயோகித்தமை நாகரீக உலகு தலைநிமிர்ந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய செய்கையல்ல.

இப்படி ஒன்றா இரண்டா? கடந்த முப்பத்தைந்து வருடகாலமாக இத்தீவின் வாழ் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட திட்டமிட்ட காடைத்தனங்கள், வன்முறைகள் எண்ணிக்கையில் அடங்கிவிடக் கூடியவையா? தமிழ் மக்களின் ஜீவனோபாய உடமைகள் மட்டுமா அவ்வப்போது சூறையாடப்பட்டன. எத்தனை தமிழ்ப் பெண்களின் கற்புகள் அவர்கள் குடும்பத்தினர் முன்னிலையிலேயே பறிக்கப்பட்டன.

காலங்காலமாய் எங்களால் பேணிப் போற்றப்பட்டு வந்த கலைப் பொக்கிசங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவற்றிற்கெல்லாம் சில லட்சம் ரூபாய்களால் ஈடுகட்டிவிடலாம் என்பது எத்தகைய கேலிக்கிடம்.

இத்தனை இம்சைகளையும் கண்ட தமிழ் மக்கள் மனச் சோர்வுற்றார்களா, இல்லை. தமது போராட்டத்தில் இருந்து இம்மியேனும் பின்வாங்கினார்களா எனினும் கிடையாது. இவ் இம்சைகள் யாவும் அவர்களின் இலட்சியத்திற்கு உரம் போட்டவையாகவே அமைந்தன. சமயம் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் மக்கள் அதை ஸ்ரீலங்கா அரசிற்கு நன்கு உணர்த்தியே வந்தனர் சமீபகாலமாக ஸ்ரீலங்கா அரசால் நடத்தி முடிக்கப்பட்ட தேர்தல்களில் அதை மிக உறுதியாய் நிரூபித்தனர்.

இன வெறியைத் தூண்டியும் இனப்படுகொலையை நடத்துவதன் மூலமாயும் அரசியல் கூதல் காய்ந்து கொண்டிருக்கும் ஓர் அரசு, நேர்மையான போராளிகளான எம்மைப் பார்த்து பயங்கரவாதிகள் என்பதிலும் வேடிக்கை வேறு என்ன இருக்க முடியும்? பாராளுமன்ற ஜனநாயகத்தின் அரை நூற்றாண்டு பூர்த்தியைக் கொண்டாடிய அதே வேளையில் இன்னொரு பக்கத்தில் தமிழ்த் தலைவர்களை, அதே பாராளுமன்ற உறுப்பினர்களை அர்த்தசாமத்தில்

இராணுவ வேட்டையாடிப் பிடிப்பதும் அவர்களை வீட்டுடன் வைத்தே தீயிட்டு கொளுத்த முயன்றமையும் உங்கள் ஜனநாயகப் பாரம்பரியத்தில் எத்தனையாவது அத்தியாயத்தில் சேர்த்துக்கொள்ளப் போகின்றீர்கள்.

பயங்கரவாதம், கொள்ளை என்கிறீர்கள் ஸ்ரீலங்கா அரசின் ஏவல்படைகளினால் நடத்திமுடிக்கப்பட்ட பயங்கர வாதங்களுக்கு இணையா? பயங்கர வாதங்கள் இத்தீவில் எக்காலத்திலும் நடக்கமுடியா, அதே ஏவல் படைகள் சூறையாடிய தமிழ் மக்களின் சொத்துக்கள் அவர்களிடம் இருந்து பறிக்கப் பட்டமையும் இத்தீவு மக்கள் ஒன்றும் அறியாத இரகசியங்கள் அல்ல. போதாக் குறைக்கு அவ்வப்போது உங்களது அரசியல் ஏஜண்டுகள்அரசியல் என்ற பெயரில் துப்பாக்கிகளை சுழற்றித் திரிந்தமை மிக அண்மைக்கால வரலாறு.

இத்துனை கேவலங்களையும் நடத்தி முடித்திருக்கும் நீங்கள் எம்மைப் பயங்கரவாதிகளாய் சித்தரிக்க கச்சைகட்டியிருப்பதைவிட இந்நூற்றாண்டின் சிறந்த நகைச்சுவை வேறென்ன இருக்கமுடியும்.

பிரிவினை கோருகின்றோம் நாட்டைத் துண்டாட முயற்சிக்கின்றோம் எனச் சொல்கின்றீர்களே நாம் எப்போது உங்களுடன் சேர்ந்திருந்தோம்? ஐரோப்பியரால் கைப்பற்றப்பட்ட எமது பூமி எக்காலத்திலும் எம்மிடம் திருப்பி ஒப்படைக்கப் படவில்லை. அதனை நாம் இணைப்பு என்ற பெயரில் யாரிடமும் தாரைவார்க்கவும் இல்லை.

ஆக்கிரமிப்புக்கள் வேறுபட்ட அதிகார அமைப்புக்களினால் கைமாறிப் பொறுப்பேற்கப்பட்டு வரும் நிலையே இன்னும் நீடிக்கின்றதே அன்றி எம்பூமியை நாமே நிர்வகிக்கும் நிலை எம்வசம் இன்னும் வரவில்லை.

இந்நிலையில் நாம் கோருவது விடுதலையே அன்றி துண்டாடல் அல்ல. இதனை நாம் கோருவது நிச்சயம் குறுகிய மனப்பான்மையான ஓர் செய்கையன்று. இதை நாம் பெறுவதன் மூலம் எமது இலட்சியம் மட்டுமல்ல நிறைவேறுவது, சிங்கள மக்களுக்கும் பெரும் நன்மையைச் செய்தவர்களாவோம். காரணம் அதன்பின் இனப்பிரச்சினையை பூதாகரமாக்கி அரசியல் பிழைப்பு நடத்தல் என்பது சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாது. இதனால் சிங்கள மக்கள் மொழிதவிர்ந்த

ஏனைய விடயங்களில் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையை பூரணமாக உணரவும், தமக்கு உண்டான அரசியல் பொருளாதார சமூகத் தளைகளில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முன்வருவர்.

**எந்த ஒரு தேசிய இனமும் தனது இறைமையை நிலைநிறுத்துவதிலும் பறிக்கப்பட்டிருப்பின் அதை மீளப்பெற்றுக்கொள்ள முயற்சிப்பதையும் தேசத்துரோகமோ அன்றி பயங்கரவாதமோ என உலகில் எந்த ஒரு சாசனமும் கூறிவிடவில்லை.** எமது உரிமைகளை நீங்கள் ஆரம்பத்திலேயே அங்கீகரித்திருப்பின் இந்நிலை இத்தீவில் தோன்ற வாய்ப்பில்லை. அங்கீகரியாமல் மட்டுமல்ல மாறாக கடந்த முப்பத்தைந்தாண்டுகளாக உங்கள் அரசியல் சோரம் போகும் நிலையை மறைப்பதற்கு பதவி நாற்காலிகளை தங்க வைத்துக்கொள்வதற்கு அவ்வப்போது அப்பாவிச் சிங்கள மக்கள் மனத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான விஷவித்தையே ஊன்றி வளர்த்துள்ளீர்கள். ஆனால் சிங்கள மக்கள் உங்கள் நச்சு வலையில் முற்றாக விழுந்துவிடவில்லை என்பதை, உங்களால் உருவாக்கப்பெற்ற இனக் கலவரங்களின் போது தமிழ் மக்களுக்கு தம்மால் முடிந்த பாதுகாப்புகளை வழங்கி காடையர்களிடம் இருந்தும், உங்கள் ஏவல் படைகளினதும் கொடுமைகட்கு தமிழினத்தை முற்றாகப் பலியிடாது அனுப்பியதன் மூலம் நிரூபித்து வைத்துள்ளனர்.

வழமையாக ஸ்ரீலங்கா அரசின் எதிர்க்கட்சிகளே தாம் பதவிக்கு வருவதற்காக தமிழ் மக்களின் பிரச்சனையில் ஆளும் அமைப்பு ஏதும் தீர்வு காண முயல்கையில் அதை எதிர்த்து குழறுவதும், சிங்கள மக்களை தூண்டிவிடுவதுமான ஒரு நிலையே ய இருந்து வந்துள்ளது. முதல் முறையாக ஓர் ஆளும் அமைப்பு நேரடியாய் தமிழ் மக்கள்பால் இனவெறியைத் தூண்டியமை கடந்த ஆறு ஆண்டுகால ஆட்சியின் மிக மோசமான நடவடிக்கை. ஸ்ரீலங்காவின் ஆளும் அமைப்பு தமிழ் மக்கள் இடையேயான உறவுநிலை எப்போதும் இல்லாதவாறு மிகவும் பழுதுபட்ட ஓர் நிலையை தோற்றுவித்தமையை இத்தார்மீகப் பொறுப்பை தற்போதைய ஆளும் அமைப்பே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் பிரச்சினையை தீர்ப்போம், தீர்ப்போம் என்றே கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக சில ஸ்ரீலங்கா அதிகார அமைப்புக்கள் சொல்லி

வருகின்றன. நாங்கள் உங்கள் தீர்வை ஏற்கின்றோமோ இல்லையோ நீங்கள் இதுவரையில் கபடமற்ற முறையில் எக்காலத்திலும் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் எடுத்தது உண்டா? மாறாக பிரச்சனையை தீர்க்கின்றோம் என்ற கபடப் போர்வையுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்யும் காரியங்களிலேயே காலம் காலமாக ஈடுபட்டீர்கள்.

உங்களிடம் தமிழ் மக்கள் எதை எதிர்பார்த்தார்கள்? பொருளாதாரத்தையோ அன்றி வேலை வாய்ப்பையோ அல்ல. **அவைகளை உங்கள் பொருளாதாரக் கொள்கைகள் ஒன்றும் நிறைவேற்றப் போவதுமில்லை** என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். இல்லை, இவைகளை எல்லாம் நீங்கள் வழங்க முன்வந்தாலும் கூட இத்தீவில் தமிழர் தொடர்ந்து தமிழராக வாழ்வதற்கு என்ன உத்தரவாதம் உங்களினால் வழங்க முடியும். அது ஒன்றும் அல்லாத மீதி எந்த சுபீட்சமும் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அந்நியமானவையே.

இத்தீவில் வனவிலங்குகளுக்கேனும் ஓர் வரையறுக்கப்பட்ட பிரதேசம் உண்டு. ஆனால் தமிழன் தமிழனாக வாழ்வதற்கு பாதுகாக்கப்பட்ட வரையறை உள்ள எதுவும் உங்களினால் இதுவரை வழங்கப்படவில்லை. நீங்களாகவே வழங்கப்போவதுமில்லை. இந்நிலைக்கு நாம் வந்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகின்றன.

விசாரணையின் நடுவே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் திரு. யோகச்சந்திரனைப் பார்த்து கேட்டார், “இந்நீதி மன்றத்தை உமக்குக் கிடைத்த மேடையாகப் பாவிக்கும் நோக்கமா?” என்று. எமக்கு எதற்கு மேடை? அப்படி ஒன்றை உருவாக்கித் தரும்படி நாமாக யாரையும் கேட்கவும் இல்லையே. மாறாக நீங்களே வலிந்து கொணர்ந்து எம்மை இங்கு நிறுத்தியிருப்பது மல்லாமல், எம்மீது அபாண்டங்களையும் சுமத்தினீர்கள். எம்மீது பொய்களை புனையச் செய்தது அல்லாது எம்மையே பொய்யராக்கவும் எத்தனித்தபோது சில உண்மைகளை இங்கு நாம் பேசினோமே அல்லாமல் நாம் மேடை நாடகம்

எதுவும் ஆடவில்லை. **உண்மைக்கு மேடையோ, அன்றி வெளிச்சமோ போட்டு காட்டவேண்டியதில்லை. அது மிகவும் மகத்தானவை. அது வெளிவருவதை எந்த சக்தியாலும் நிரந்தரமாய் தடுத்துவிட முடியாது**.

நாம் பயங்கரவாதிகளும் அல்லர். அதன் எந்த உருவையும் ஆதரிப்போரும் அல்லர். மாறாக, அதை நாம் கண்டித்து உள்ளோம். ஆனாலும் பயங்கர வாதம், பயங்கர வாதம் என ஓலமிடும் பெருந்தகையாளர் கட்சிக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன், உங்களினால் கிளப்பி விடப்பட்ட இனத்துவேச தீயினாலும், ஆயுதக் காடையர்களினாலும் நூற்றுக்கணக்கான தமிழர் உயிர் இழந்தபோதிலும், தமிழ் பெண்கள் கற்பு அவர்கள் குடும்பத்தினர் முன்னிலையிலேயே பறிக்கப்பட்டபோதும், அவர்களின் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் சொத்துகள் சூறையாடப்பட்ட போதும் அவை உங்கட்கு பயங்கரவாதம் எனத் தோன்றவில்லையா? இல்லை, அதற்கு மேற்பட்ட சொற்கள், அதற்கு ஏதேனும் உண்டா என இன்னமும் அகராதியில் தேடிக்கொண்டிருக்கின்றீர்களா?

மாறாக, தமிழ் ஈழத்தில் ஒரு சில பொலிசாரின் உயிர்கள் பறிக்கப்பட்ட போதும், வங்கி உடைமைகள் கொள்ளை போனதுமே தானா உங்களுக்கு பயங்கரவாதமெனத் தோன்றுகிறது. அப்படியாயின் இங்கு ஏற்கனவே பி.சொ.ஜெ. சொன்னதை எடுத்துக்கொள்ளலாம் என்ற கையறு நிலையை இப்போதே எய்திவிட்டீர்களா? அன்றி, எமக்கு இழைக்கப்படும் அநீதியை நிறுத்தி எம் இறைமையை அங்கீகரிக்கும்படியும், அதன் முதல் கட்டமாய் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்கும் ஓர் அம்சமாய், அதன் மொத்த உரித்தாளரான ஸ்ரீலங்காவின் ஆயுதப்படைகளை எம் பூமியில் இருந்து மீளப்பெற உங்கள் அரசை வற்புறுத்துவதன் மூலம் உங்கள் மனோ விசாலத்தை உலகிற்கு உணர்த்தப் போகின்றீர்களா? தீர்மானிக்கும் பொறுப்பை உங்களிடமே விடுகின்றோம்.

நாடு வேறானாலும் கூட ஒரே தீவின் பிரஜைகள் என்ற வகையில் உங்கள் புரிந்துணர்வை பெற வேண்டும் என்ற நல் நோக்குடனேயே இவ்வழக்கின் விசாரணைக்கு நாம் சமூகமளித்தது மட்டுமல்லாது, இன்று எமது நிலையையும் உங்கட்கு தெளிவாய் காட்டினோம். இதனால் ஏற்படும் புரிந்துணர்வின் மூலம்

எதிர்காலத்தில் எம்பொருட்டு நீங்கள் குரல் கொடுப்பீர்களே ஆயின், மிக்க மனநிறைவை எய்தியவர்களாவோம்.

இல்லாவிடினும் கூட தற்போதைய சமூக, பொருளாதார நடவடிக்கைகளே தொடர்ந்து அதன் சுமை தாங்காது என உணர்ந்து அதன் தளைகளை உடைத்து உங்களை விடுவிக்க நீங்கள் நடத்தும் போராட்டத்திற்கு நாம் மிக உறுதுணையாய் இருப்போம் என்பதை மனப்பூர்வமாய் உங்கட்கு தெரிவிக்கிறோம்.

**தமிழ் ஈழம் அமைப்பது ஒன்றேதான் எமது முற்றான பணி** என நாம் சொல்லிவிடமாட்டோம். ஈழத்தீய தமிழர், தமிழராய் தொடர்ந்து வாழ வேண்டுமாயின் தமிழ் ஈழம் அமைப்பது ஒன்றுதான் நம் முன் உள்ள ஒரே வழி என்பதனை ஸ்ரீலங்கா அரசு பல வழிகளிலும் எம்மை உந்தியதன் மூலமே அவ்வழியில் மிக முனைப்பாய் உள்ளோம்.

**எமது நோக்கு மிக விசாலமானது ஆப்பிரிக்கக் கண்டம் என்றால் என்ன, லத்தின் அமெரிக்க நாடு என்றால் என்ன, எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்தையும் உள்ளடக்கியது. அப்படி இருக்கையில் எமது சக தேசத்தவரான மக்களின், குறிப்பாக சிங்கள மக்களின் நலன் அதற்குள் அடங்காது** எப்படிப் போகும்.

இப்படி இருக்கையில் ஸ்ரீலங்காவின் பொலிசார் மட்டுமே உங்கள் பார்வையில் அப்பாவிகளாய் தோற்றம் தருகின்றார்களா? பச்சைக் கொலையாக 1977ஆம் ஆண்டில் மட்டும் உயிர் இழந்தவர்களே 400க்கும் மேற்பட்ட தமிழர்கள். அவர்களின் குருதி பாய்ந்து ஓடியதால் இத்தீவின் மேல் கவிழ்ந்திருந்த வானமே செக்கல் மயமானது. அவை எல்லாம் உங்களுக்கு பயங்கரவாதம் என்று தோன்றவில்லையா, தமிழ் மக்களைக் கொலை செய்தவர்கள் மட்டுமே, அப்பாவிகளாகவும் குற்றம் செய்யாதவர்களாகவும் உங்களுடைய கண்களுக்கு தோற்றம் தருகின்றார்களா? தமிழ் மக்களின் உயிர் உடைமை என வரும்போது உங்கள் சிந்தையின் மெல்லிய உணர்வுகள் அறவே மரத்து விடுகின்றனவா? அல்லது அப்படியான ஒரு உணர்வு உங்கள் வாழ்வில் புரியாத ஒரு மொழியா?

**நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ, அன்றி அது மாதிரியான நோய்களால் பாதிப்புற்ற மனநோயாளிகளோ அல்லர். மாறாக விடுதலையை முன் வைத்துப் போராடும் ஓர் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள்.**

சிங்கள மக்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். எமது பூமியில் மட்டுமல்லாது உங்கள் நாட்டின் பல பாகங்களிலும் மிக அண்மைக்காலம் வரை தமிழ் மக்கள் மீது பல தடவைகள் உங்கள் நாட்டு அதிகார அமைப்பினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கர வாதத்தை சரி என நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? அன்றியும் இவைமட்டுமல்லாது நம்மை நாம் அல்லதவராக்கும் முயற்சியிலும் பல வழிகளிலும் ஈடுபட்டு வரும் உங்கள் அரசின் நாகரீகமற்ற நடவடிக்கைகளின் பாதிப்பில் இருந்து எம்மக்களை மீட்க நாம் முன் நின்றமையைத் தான் தவறு என்று சொல்வீர்களா?

அப்படியான ஓர் உயர்ந்த லட்சியத்தை முன்வைத்துப் போராடிய எம் மீது பயங்கரவாதத் திரையை போர்த்தி உங்கள் நாட்டுச் சட்டங்களிலும் பயங்கர வாதத்தைப் புகுத்தி புதுப் பெருமையைத் தேடிக் கொண்ட உங்கள் அதிகார அமைப்பு எம்மீது விசாரணை என்ற பெயரில் நடத்தும் கண்துடைப்புகளையும் சரி என ஏற்றுக் கொள்கின்றீர்களா? அல்லது பாதிக்கப்படுபவன் தமிழன்தானே என்ற பொறுப்பற்ற உணர்வா? அப்படியாயின் தற்போதைக்கு உங்கள் மீது எம்மால் அனுதாபம் கொள்ள மட்டுமே முடியும்.

நாம் விடுதலை பெறுவது **நிதர்சனமான உண்மை. அதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப் புத்தகங்களில் நிரந்தர இடம் பெற்றுவிட்ட எச்சட்டங்களும் எம்மை அணுகா. அப்படியாயின் இச்சட்டங்களையும் பயங்ர வாதத்தையும் எதிர்காலத்தில் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்கள் என்ற கையறு நிலையை இப்போதே எய்திவிட்டீர்களா?**

இரு அயல் தேசங்கள் ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்ற நிர்ப்பந்தம் இல்லை. மாறுபட்ட கொள்கை உடைய எத்தனையோ நாடுகள் பொருளாதாரம், பாதுகாப்பு என்ற விடையங்களுக்காக சில பொதுக் கோட்பாடுகளுக்கு இடையில்

ஒரு அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வரவில்லையா? அதற்காக அந்நாடுகள் தமது இறைமையை விட்டுக் கொடுத்து விட்டன என நாம் சொல்ல முடியுமா? அப்படி இருக்கையில் இத்தீவின் நன்மையை மட்டும் கொண்டதல்ல **இவ்வுலகின் வல்லாதிக்கம் கொண்ட சில சக்திகள், தெற்காசியப் பிராந்தியத்தில் குறிப்பாய் மூன்றாம் மண்டல நாடுகளை பொருளாதார ரீதியில் தலையெடுக்க விடாது செய்து வரும் கூட்டுச் சதியை முறியடிக்கும் விதத்தில் இந்த உபகண்டத்தின் தன்னாதிக்கமுள்ள முற்போக்குக் குடியரசுகள், இவ்வுபகண்ட நம்மை கருதி அதற்கு ஒரு பொது அமைப்பையோ அல்லது எந்தக்குடியரசினதும் தன்னாதிக்கத்திற்கு பங்கம் வரா வகையில் பல குடியரசுகள் கொண்ட ஒரு ஒன்றியத்தை உருவாக்கும் பட்சத்தில் உபகண்ட நன்மை கருதி தமிழ் ஈழம் நிச்சயமாக தன் பங்களிப்பை வழங்கும்.**

இறுதியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஸ்ரீலங்கா அரசின் எந்த அமைப்பிலும் இருந்து நாம் நீதியை எதிர்பார்க்கவில்லை. இம்மன்றமும் அதற்கு விதிவிலக்கல்ல. எமக்குத் தெரியும் உங்களது சங்கடமான நிலைமை சுயேச்சையான நிர்வாகம் அருகிவரும், உங்கள் அரசியல் அமைப்பில் நீதி நிர்வாகத்தில் பணிபுரிபவர்கள் அரசை திருப்தி பண்ணியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருப்பது இயல்பே. இந்நிலையில், தமிழ் இன விடுதலை இயக்கங்களை நசித்தே ஆவேன் என கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ஓர் அரசின் மன்றத்தில் இனியும் மெனக் கெடுவதற்கு ஏதுமில்லை. எமது இயக்கத்தின் மீதும் இம்மன்றத்தில் நடத்திமுடிக்கப்பட இருக்கும் இரண்டாவது வழக்கு இது. இனி எத்தனை வழக்குகள் எம்மீது உங்களால் சோடிக்கப் பட்ட போதும் நாமும் விசாரணையில் பங்கெடுத்துக் கொண்டது எனும் நிலை இவ்வழக்குடன் பூர்த்தியாகின்றது. உங்களது நோக்கம் எம்மை தண்டிக்க வேண்டும் என்பதே. அதை இனி எமது எந்தவித இடையூறும் இல்லாது விருப்பம்போல் மிகச் சுலபமாய்ச் செய்யுங்கள். தற்போதைக்கு உங்களுக்கு நாம் செய்யும் உதவி இதுவே.

தற்போதைக்கு இவ்வழக்கின் மூலம் உண்மை நிலையை உலகிற்கும் குறிப்பாய் இத்தீவின் மக்கள் யாவர்க்கும் உணர்த்தி விட்ட மகிழ்வே எமக்கு மேலோங்கி உள்ளது. மக்களின் மனத்தீர்ப்பே எமக்கு முக்கியமானவை.

அவர்கள் தீர்ப்பு நிச்சயமாய் எமக்கே சாதகமாய் அமையும் என்ற நிறைவை எய்தியுள்ளோம். இனி எம்மீது எத்தனை வழக்குகள்தான் சோடிக்கப்பட்டாலும், எத்தனை அவதூறுகள் வாரி இறைக்கப்பட்டாலும் எமக்கு அது பற்றிக் கவலை இல்லை. உங்களது அந்த நடவடிக்கைகள் மூலம் வெற்றி பெறப்போவதும் நாமே. உங்கள் தீர்ப்பின் பாதிப்புகள் எம்வரை அந்நியமானவையே.

**எனவே நாம் எமது கடமையை முடிந்தவரை செய்த மனநிறைவுடன் எதிர்காலத்தை சிறையில் களிக்வோ – வேண்டுமாயின் மரணத்தைக் கூட தழுவவோ நாம் தயங்கவில்லை.**

ஓர் இனத்தின் விடுதலை வரலாற்றில் இவை எல்லாம் மிகச் சர்வ சாதாரண சம்பவங்களே! இதை நாம் தெரிந்தே ஈடுபட்டோம். எமக்கு ஏமாற்றம் என்பது எதுவுமே இல்லை. எதை எய்கின்றோமோ அதுவேதான் நம்மிடம் திரும்பிவரும். எதை விதைக்கின்றோமோ அதையேதான் அறுவடை செய்ய வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். **நாம் விதைத்தவை விஷ விதைகளுமல்ல, எய்தவை நச்சு பாணங்களுமல்ல. அதனால்தான் இந்த நிமிடத்திலும் நான் மிகத் தெளிவாக மனநிறைவுடன் நிற்கின்றேன்.**

வாழ்க தமிழ்
வளர்க தமிழ் ஈழம்
அகன்று போகட்டும் வறுமையும்
அணுவாயுதப் பயமுறுத்தலும்
ஒழிக பசியும் பிணியும்
ஓங்கட்டும் மனித நேயம்.

# விடுதலை தியாகிகளுக்கு சத்தியேந்திராவின் வீர வணக்கம்

எமது இயக்கத் தோழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசினால் சோடிக்கப்பட்ட வழக்கில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க வாதத்தினை நிகழ்த்திய சத்தியேந்திராவின் தொகுப்புரையின் ஒரு பகுதி இது.

ஒரு கொள்கை பலம் பெற்று வருகின்றது. அக் கொள்கைக்கு ஆதரவாளர்கள் பெருகுகின்றார்கள். அக் கொள்கையைப் பிரச்சாரம் செய்வோர் பெருகுகின்றார்கள். தொண்டர்கள் திரளுகின்றார்கள். நாம் ஏற்றுக்கொண்ட கொள்கையை செயல்படுத்த முனையும் போது, அதனை எதிர்ப்பவர்களுடன் மோதல் ஏற்படுகின்றது. இதனால் தியாகிகள் உருவாக்கப்படுகின்றார்கள். இவர்கள் செய்யும் தியாகம் அவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு உரமாக அமைகின்றது. தீவிரவாதிகளின் கொள்கை வெற்றி பெறும் வரை அந்நாட்டிற்கோ அந்நாட்டை ஆளும் அரசிற்கோ சமாதானமோ, ஆறுதலோ ஏற்படமாட்டாது. இதுதான் வரலாறு கூறும் பாடம். இதைப் படிக்க மறுப்பவர்கள், அதை அனுபவித்துப் பார்த்துக் கொள்ளட்டும்.

இவ்வழக்கின் ஆரம்பத்திலேயே சாட்சிக்கூண்டில் ஏறிய எதிரிகள் தாம் தமிழர்கள் என்பதையும், தமிழ் இன சமுதாயத்தின் விடுதலைக்காக தமது உயிரை அர்ப்பணிக்கவும் துணிந்தவர்கள் என்று கூறியுள்ளனர். “சுதந்திரம் கோரும் மக்களை அரசின் மிருக பலத்தினால் அடக்கிவிட முடியாது. எத்தனை ஆயுதம் தாங்கிய பொலிசாரையும் ஆயுதப்படையினரையும் குவித்தாலும் எத்தனை துப்பாக்கிகளை வைத்திருந்தாலும் விடுதலை வேட்கையை நசுக்கிவிடவோ ஒடுக்கிவிடவோ முடியாது. விடுதலைப் போராளிகளை எதிர்த்துப் போராடும் வீரர்களையும் துவக்குகளையும், சிறைக்கூடங்களையும் விட விடுதலை வேட்கையும் விடுதலை அபிலாசைகளும் பலம் மிக்கவை என்கின்ற கருத்தை அரவிந்தன் கோஷ் வெளியிட்டிருக்கின்றார்.

நான் இறுதியாக ஒரே ஒரு விடயத்தை மட்டும் கூற விரும்புகின்றேன். நீதிமன்றப் பதிவேட்டில் பதியப்படுவதற்காக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த எனது கட்சிக்காரர்களின் சார்பில் நான் வெளிப்படையாகக் கூறுவது இதுதான். தமது மக்களின் மீட்சிக்காக எந்த மனிதனும் அர்ப்பணிக்க வேண்டிய மிக உன்னதமான பொருளான தமது உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக என்னுடைய மக்கள் இடையே இருந்து என்னுடைய இனத்தில் இருந்து முன்வந்திருக்கும் என்னுடைய கட்சிக்காரர்களின் முன்னால் என்னை நான் மிகவும் சிறியவனாக அற்ப மனிதனாகவே கருதிக்கொள்கின்றேன்.



தேசபிதா தங்கத்துரை

(நடராசா தங்கவேல்)



தளபதி குட்டிமணி

(செல்வராஜா யோகச்சந்திரன்)



முன்னனி போராளி ஜெகன்

(கணேசானந்தன் ஜெகநாதன் )



முன்னனி போராளி தேவன்

(செல்லத்துரை சிவசுப்பிரமணியன்)

TELO

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

**www.telo.org #twitter.com/contacttelo**
**#facebook.com/telo.org**